# வளர்முக நாடுகளில் பெண்கல்வி: விருத்திக்கான மீள் சிந்தனை

மா. சின்னத்தம்பி

## அறிமுகம்

பெண்களுக்கு கல்வியூட்டுவதால் பெறக் கூடிய பொருளாதார மற்றும் சமூக நலன்கள் ஆண்களுக்கு கல்வியூட்டுவதை விடவும் பன்மடங்கு பரவல் விளைவுகள் கொண்டதாகும். எனினும் பெரும்பாலான வளர்முக நாடுகளில் இன்று வரை பெற்றோரும் சமுதாயமும் ஆண்களின் கல்வியில் முதலீடு செய்வதை விடவும் குறைவாகவே பெண்களின கல்வியில் முதலீடு செய்து வருகின்றனர். வளர்முகநாடுகளில் பெண்களின் கல்வி தொடர்பான தடைகள் பற்றியதாகவும் அவர்களின் முன்னேற்றத்திற்குதவக் கூடிய கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதற்குரிய அணுகுமுறைகளை அடையாளம் காண்பதாகவும் இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## பெண் கல்வி முரண்நிலை

உலகளாவிய ரீதியில் கடந்த மூன்று தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முயற்சிகள் நாடுகளின் அபிவிருத்தியிலான பெண் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளன. பெண்கல்வி விருத்தி பெண்களின் தனிப்பட்ட கல்விக்கான வருவாய்களை மாத்திரம் அதிகரிக்க உதவுவதில்லை. சிறிய மற்றும் வறிய குடும்பங்களின் முன்னேற்றங்களை பெண் கல்வி பெருமளவில் நிர்ணயிக்கின்றது. கல்விகற்ற பெற்றோரின் பிள்ளைகள் ஆரோக்கியமான குழந்தைகளாக வளர்வதில் தந்தையரின் கல்வியை விட தாயாரின் ஆரம்பமற்றும் இடைநிலைக் கல்வி பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. ஊழியச் சந்தையில் கல்விகற்ற பெண்கள் அதிகளவு பங்கேற்பதனூடாகவும், அவர்களது வருமானம் கல்விகற்பதன் மூலம் உயர்ந்து செல்வதனூடாகவும் வளர்முக நாடுகளின் வறுமையை பெருமளவில் தணிக்க முடியும். இத்தகைய நலன்களை உறுதி செய்வதற்கு மனித வள முதலீடு என்ற நோக்கில் பெண்கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று உலகவங்கி பத்தாண்டுகளுக்கு முன்பே உணர்ந்திருந்தது. [1] 1965- 87 காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வியில் மாணவர் சேரும் விகிதம் குறிப்பிடத்தக்களவில் முன்னேறியிருந்த போது, பெண்களின் இடைநிலைக் கல்வியில் சேரும் விகிதம் வேகமாக அதிகரித்திருந்தது. எனினும் ஆண்களைவிட குறைந்ததாகவே காணப்பட்டது. பிரதேசரீதியிலும் ஆண் - பெண் கல்விமட்டத்தில் வேறுபாடு காணப்படுகின்றது. மத்திய கிழக்கு, உபசகாரா, ஆபிரிக்கா, தென்னாசியா நாடுகளில் இத்தகையவேறுபாடு அதிகமாகும். இலத்தீன அமெரிக்காவில் பொலீவியா, குவாத்தமாலா, ஹெயிற்றி தவிர்ந்த ஏனைய நாடுகளில் இத்தகைய வேறுபாடு எதுவுமில்லை; அல்லது புறக்கணிக்கத் தக்க அளவிலேயே உள்ளது. [2]

வளர்முக நாடுகளில் பாடசாலையில் சேரும் விகிதம் உயர்ந்து செல்லும் போக்கு காணப்பட்டாதும் பால் ரீதியிலான சமமின்மை குறைந்து விடுவதில்லை. பெண்களின் பாடசாலை சேரும் விகிதம் கூட ஆரம்பக்கல்வியில் காணப்படும். அதிகரிப்பு விகிதத்தில் இடைநிலைக் கல்வியில் காணப்படவில்லை. நாடுகளின் தலாவருமானம் உயர்ந்து சென்றால் ஆண் பெண் சமமின்மை குறைந்து செல்லும் என்பதற்கு எவ்வித சான்றுகளுமில்லை. மத்தியகிழக்கு நாடுகளில் எல்லா மாணவருக்குமான பாடசாலை சேரும் விகிதம் மிகவும் உயர்ந்தபோதும் பெண்கள் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. கல்வி மீதான அரசாங்கத்தின் செலவுகள் மிகவும் உயர்வாக உள்ள நிலையிலும் பெண்களின் பாடசாலை சேர்வில் சமத்துவத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. தமது தேசிய வருமானத்தின் 3-4 சதவீதம் வரை செலவிடுகின்ற நாடுகளில் இலங்கை, கொரியாக் குடியரசு போன்ற நாடுகளில் பெண்கள் தொடர்பாக சமத்துவம் உயர்வாக உள்ளபோதும் லைபீரியா, மாலி போன்ற நாடுகளில் பெண்கள் சேரும் விகிதம் மிகவும் மோசமாகவேயுள்ளது. அரசாங்கங்கள் கல்விச் செலவுகளை குறைக்கும் போதும் அது பெண்களின் கல்வி தொடர்பாகவே அதிகபாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. [3]

பெண்கள் உலக குடித்தொகையில் பெரும்பான்மையினராக உள்ள போதிலும், அபிவிருத்தி வாய்ப்புகளில் மிகவும் சிறிய பங்கினையே பெறுகின்றனர். உயர்வான கல்வி வாய்ப்புக்கள், உயர் கல்வி சார்ந்த சிறந்த தொழில்கள் அரசியல் முறைமை, போதுமான நலத்துறை வாய்ப்புக்கள் என்பவற்றிலிருந்து அவர்கள் பெருமளவுக்கு விலக்கப்பட்டு விடுகிறார்கள். உலக குடித்தொகையில் பெண்கள், சிறுமியர், பங்கு அரைவாசியாக உள்ளபோதிலும் உலக வேலை மணித்தியாலங்களில் மூன்றில் இரண்டு பங்கினை வழங்கும் போதும் அவர்கள் உலக வருமானங்களில் நூறில் ஒரு பங்கை மாத்திரம் பெறுகின்றனர். [3]

பெண்கள் எழுத்தறிவுடையோராக இருத்தலின் அவசியம் பெரிதும் விரும்பப்படுவதில்லை. சமூக அநீதியும், புறக்கணிப்பும் அவர்களது இயலுமையை அங்கீகரிக்கவிரும்பாமையும், சமபங்காளாராக அங்கீகரிக்க முன்வராமையும் தொடர்ந்து நிலவுவதாக பெண்கல்வியலாளர் நீலு றோ மேத்ரா (Neelu Roh Metra) குறிப்பிடுகிறார். [4]

தென்னாசியாவில் ஆண்களின் எழுத்தறிவு விகிதத்திலும் 50% மாகவே பெண்கள் எழுத்தறிவு காணப்படும் போது வேறுபல நாடுகளில் நிலைமை மேலும் மோசமாகவே காணப்படுகின்றது. நேபாளத்தில் 35% மாகவும் சியராலியோனில் 37% மாகவும் சுடானில் 27% மாகவும் ஆப்கானிஸ்தானில் 32% மாகவும் காணப்படுகின்றது.

உயர்கல்வியிலும் வளர்முக நாடுகளில் பெண்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றனர். உப- சகாரா நாடுகளில் ஆண்களின் உயர்கல்வி சேர்வு விகிதத்திலும் பார்க்க பெண்கள் விகிதம் மூன்றில் ஒன்றாகவே காணப்படுகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப கல்வியில் நன்மைகளும் அதிகாரமும், அந்தஸ்தும், உயர்வாக இருப்பதால் வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட அத்தகைய கல்வியில் பெண்கள் விகிதம் குறைவேயாகும். ஆண்களுடன் ஒப்பிடுமிடத்து பெண்கள் இக்கல்வியில் சேரும் விகிதம் ஸ்பெயினில் 28% மாகவும் அவுஸ்திரியாவில் 25% மாகவும் கனடாவில் 29% மாகவும் மாத்திரமே உள்ளது[5] வளரமுக நாடுகளில் இது மேலும் குறைவானதாகும்.

கல்வி வேறுபாடு தொடர்பாக வளர்முக நாடுகளில் தொழில் வாய்ப்புக்களிலும் உரிய வாய்ப்பு பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆண்கள் பெறும் தொழில் வாய்ப்பு அளவில் 50% வரையிலேயே பெண்கள் பெறுகின்றர். இவ்வாறே கூலி மட்டத்திலும் சமமின்மை காணப்படுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றிலும் பெண்கள் கூலி மட்டம் நியாயமற்ற முறையிலேயே பேணப்பட்டு வருகின்றது. [6]

## பெண்கல்விக்கான தடைகள்

பல வளர்முக நாடுகளில், இலவசக்கல்வி வழங்கப்படுகின்ற போதிலும், பெரிய குடும்பங்களைக் கொண்டுள்ள வறிய பெற்றோர் தமது எல்லாப் பிள்ளைகளையும் குறிப்பாக பெண்களை பாடசாலைக்கு அனுப்ப முடியாதுள்ளனர். பெண்கள் "வீடுகளில் உதவி செய்யக்கூடியவர்" என்ற அடிப்படையில் அவர்கள் பாடசாலைக்கு செல்வதை பெற்றோர் விரும்புவதில்லை. பெண்கள் பாடசாலை செல்வதால் பாடசாலைக்கட்டணம், புத்தகங்கள், சீருடை, தொடர்பான செலவுகளை ஏற்படுமிடத்து அதனை தாங்கமுடியாத நிலையிலும் பெற்றோர் பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில்லை. வீட்டில் துணை செய்யக் கூடிய பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதால், அவர்கள் செய்யும் வேலைக்காக வேறு ஆட்களை அமர்த்துவதால் புதிய செல்வுகள் ஏற்படும். இத்தகைய அமையச் செலவு (Opportunity Cost) பெற்றோரால் விரும்பப்படுவதில்லை. பெண் குழந்தைகளை தொழிலாளர்களாக அங்கீகரிக்கும் சமுதாயங்களில் பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு விடுவதால் ஊழியம் தொடர்பான நன்மைகளை இழக்க வேண்டி ஏற்படும் என பெற்றோர் தயங்குவதுமுண்டு. மிகவறிய விவசாயப் பொருளாதாரங்களில் வேதனம் பெறுகின்ற மற்றும் வேதனம் பெறாத பணிகள் ஊடான பெண்களின் பொருளாதார பங்களிப்பு மிகவும் உயர்வானதாகும். இதனடிப்படையில் பெற்றோர் மேற்கொள்ளும் முடிவு பெண்கள் தொடர்ந்து பாடசாலை செல்வதைத் தடைப்படுத்துகின்றது. வேலை தொடர்பான குடும்ப நன்மைகள் என்ற நோக்கத்திற்கு அப்பால் கலாச்சார மரபுகள், பெண்களின் பாதுகாப்பு என்ற நோக்கங்களினடிப்படையிலும் பெற்றோரின் தீர்மானம் பெண்கள் பாடசாலை செல்வதை தடைப்படுத்துகின்றன. தென்னாசிய நாடுகளிலும் இக்கலாசாரக் காரணிகள் பெண்கல்விக்கு தடையாக விளங்கி வருகின்றன.[7] வளர்முக நாடுகளில் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புக்களும் பெண்களின் எதிர்கால உழைப்பாற்றலை பாதிக்கும் நிலை காணப்படுவதால், பெண்களின் கல்வியில் முதலீடு

செய்வதற்கு பெற்றோர் உற்சாக மற்றோராக காணப்படுகின்றனர்.

பெண்களின் கல்வினால் கல்வி வழங்கும் குடும்பத்திற்கு எந்தவித நன்மைகளும் ஏற்படமாட்டா என்ற அபிப்பிராயமும் பெற்றோர் மட்டத்தில் காணப்படுகிறது. பெண்கள் திருமணம் செய்து தனியாக செல்லுமிடத்து கல்வியினால் பெறக்கூடிய நன்மைகளையும் தம்முடன் எடுத்துச் சென்று விடுவர். ஆனால் ஆண் பிள்ளைகளானால் பெற்றோர் வயது முதிரும் காலம் வரை பெற்றோருடனிருப்பர். இதனால் ஆண்களுக்கு கல்வியூட்டுவதால் பெண்களுக்கு கல்வியூட்டுவதை விட பெற்றோர் அதிகம் நன்மையடைவதாக எண்ணுகின்றனர்.

பெண்கள் கல்விகற்றாலும் ஆண்கள் பெறும் அளவு கூலியை பெற முடியாது. ஊழியச் சந்தையில் பெண்களுக்கான கூலிமட்டம் ஆண்களுக்கு சமமானதாக காணப்படுவதில்லை. இதனால் பெற்றோர் பெண்களின் கல்விக்கு செலவிடும் பணத்தை நிறுத்தி தமது ஆண்பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவது அதிகளவு பயனுடையதென நம்புகின்றனர். இதனால் பெண் கல்வி தொடர்பான பெற்றோர் நோக்கும் சம்மதமும் பெண்கல்விக்கு தடையாகவேயுள்ளது. இத்தகைய நோக்கும் போக்கும் பெண்கல்வி மேம்பாட்டினால் நாடுகள் பெறக்கூடிய நன்மைகளை இல்லாமற் செய்து விடுகின்றன. பெண்களுக்கு போதியளவு கல்வியூட்டுவதால் குடித்தொகைவளர்ச்சி குறைவடையமுடியும்; வருமானம் உயர்வடைய முடியும்; நாட்டின் உற்பத்தித்திறன் அதிகரிக்க முடியும்; எல்லா மக்களினதும் வாழ்க்கைத் தரம் உயர முடியும். இத்தகைய எல்லா வகை அநுகூலங்களையும் நாடுகள் இழந்து விடுவது உண்மையில் வளர்முகநாடுகளைப் பொறுத்தவரை அபிவிருத்தி சார் இழப்பேயாகும். பெற்றோர் நோக்கில் மாத்திரம் பெண்கல்வி முன்னேற்றங்களும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களும் தடைப்பட்டு நிற்கவில்லை. குடும்பமட்டத்தில் பெண்கல்வி தொடர்பாக நிலவி வரும் அபிப்பிராயங்களும் நம்பிக்கைகளும் மாத்திரம் அவர்களின் கல்விவளர்ச்சியை தடைப்படுத்தவில்லை.

## பொருளாதார குறுக்கீடுகள்

பொருளாதார ரீதியிலான செயற்பாடுகளும் வளர்ச்சி மாற்றங்களும் கூட பெண்கல்விக்கு எதிரானதாகவே வளர்ச்சி பெற்றுள்ளன. கல்விகற்ற பெண்களுக்கு கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்பு அவர்கள் பெறுகின்ற கல்வி எத்துறை சார்ந்தது என்பதிலேயே தங்கியிருந்தது. இலங்கையில் பொறியியல் துறையில் பெண்கள் சேரும் விகிதம் 10% வரையிலும் முகாமைத்துவத்தில் 30% வரையிலும் காணப்படும் போது கலைத்துறையில் 46% மாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மென்பொருள் பொறியியல் (Software Engineering) கணக்கியல், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் கையாளப்படும் உணவுத் தொழில் நுட்பம் (Food Technology) போன்றவற்றில் பெண்களுக்குரிய கல்வி வாய்ப்புக்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன. இதை விடவும் பெண்களின் முன்னேற்றத்திகுரிய அடிப்படைகளை உருவாக்கக் கூடிய ஊட்டம், குடும்பக்கட்டுப்பாடு, எயிட்ஸ் தடைமுறைகள், சூழல் பாதுகாப்பு தொடர்பான கல்வியும் அறிவும் கைத்தொழில் நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து வளர்முக நாடுகளில் குறிப்பாக கிராமியத்துறைப் பெண்களுக்கு திருப்திகரமாக வழங்கப்படவில்லை. கரீபியன்நாடுகளில் உயர் தொழில்நுட்பம், பேரளவு, மூலதனச் செறிவு கொண்ட தொழில்களுக்கு சார்பான கொள்கைகள் பின்பற்றப்படும் போதெல்லாம் பெண்கள் அவற்றிலிருந்து புறந்தள்ளப்பட்டுசிறிய தொழில்களிலும், பண்ணைகளிலும் தொழில் வாய்ப்பு வழங்கப்படுவதாக ஆய்வாளர் கண்டறிந்துள்ளனர்.[8] சம்பளத்துடனான லீவு. தொழிற்சங்க உரிமை தொழிசார் நலப்பாதுகாப்பு, போன்றவற்றை வழங்கக்கூடிய முறைசார்ந்த ஊழிய வாய்ப்புக்களில் அல்லாது ஊழிய நியமங்கள் பின்பற்றப்படாத - பாதுகாப்பற்ற - முறைசாராத் துறைகளிலேயே பெண்களுக்கான தொழில் வாய்ப்பு அதிகரித்துச் சென்றது. பெரு நாட்டில் முறைசாராதுறை (Informal Sectors) களிலான பெண்களுக்குரிய தொழில்வாய்ப்பு பங்கு 1983இல் 36.2% இலிருந்து 1987இல் 45% இற்கு உயர்ந்திருந்தது. தொழில் பயிற்சி எதுவுமற்ற, நிலமற்ற பெண்கள் பிச்சை எடுத்தல், விபச்சாரம் செய்தல், மற்றும் சட்டரீதியற்ற தொழில்கள் போன்ற-வற்றிலேயே வருமானம் ஈட்ட முனைந்தனர்.[9] அறிவு இடைவெளி (Knowledge Gap) பெண்களை நலன்மிக்க பொருளாதார வாய்ப்புக்களிலிருந்து புறந்தள்ளியிருந்தது.

சுயமாகத் தொழில் முயற்சிகளை நடாத்தக்கூடிய தொழில் முனைவோராக வளர்வதற்குரிய கல்வி வாய்ப்புக்கள் ஒழுங்கான முறையில் வழங்கப்படவில்லை. சொத்துக்களை வைத்திருக்கும் உரிமைகள் பல வளர்முக நாடுகளில் முழுமையாக வழங்கப்படாதிருப்பதுடன் கடன் பெறுவதற்கு ஆண்களின் பிணையும் வற்புறுத்தப்படுகின்றது. மிக அண்மைக்காலங்-களில் அரசாங்கங்களினால் வழங்கப்படும் பெண் தொழில் முயற்சியாண்மையினருக்கான கடன்கள் மற்றும்

நிதிவசதி பற்றிய அறிவு போதியளவில் பெண்களிடையே பரப்பப்படவில்லை. இந்தியாவின் அனுபவத்தில் பசுமைப்புரட்சி (Green Revolution) வெண்மைப்புரட்சி (White Revolution) நீலப்புரட்சி (Blue Revolution) ஏற்பட்ட போதெல்லாம் தீர்மானங்களை மேற்கொள்ளும் நிறுவனங்களின் தலைமைத்துவத்தை ஆண்கள் கைப்பற்றிக் கொண்டதால் அவற்றின் நலன்களில் பெண்கள் உரிமை கொள்ள முடியவில்லை.[10]

## அரசியல் புறக்கணிப்புக்கள்

பெண்கள் கல்வி வாய்ப்புக்களை பெறுவதிலும் கல்வி வசதிகளை சமமாக பயன்படுத்துவதிலும் காணப்படும் தடைகள் வளர்முக நாடுகளில் தொடர்ந்தும் அகற்றப்படாது இருப்பதற்கு அரசியல் ரீதியிலான தலைமைத்துவம், மற்றும் உரிமைகள் பெண்களுக்கு போதியளவு வழங்கப்படாமை பிரதான காரணமாகும்.

எந்த ஒரு துறையிலும் பெண்களின் முன்னேற்றதுக்கான வாய்ப்புக்கள் மற்றும் வளங்கள் அனுமதிப்பது பற்றிய முடிவுகளை எடுப்பதில் பெண்களுக்குரிய இடம் வழங்கப்படாமையே அவர்களின் கல்வி ரீதியிலான நலக் கேடுகளுக்கு அடிப்படைக்காரணமாகின்றது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குடும்பம் சார்ந்த எல்லா முடிவுகளையும் ஆண்களே தனியாக மேற்கொள்வதாக சுட்டிக்காட்டின.[11] பெண்கள் தொழில்துறை தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்குரிய முயற்சியாண்மை அனுமதிகளை பெற்றுக் கொள்வதும் தக்க வைத்துக் கொள்வதும் மிகவும் கடினமாயுள்ளது. ஆபிரிக்காவில் தன்சானிய நாட்டின் அனுபவம் இதனை தெளிவு படுத்துவதாயுள்ளது.[12] மிகவும் உயர்ந்த மட்டத்தில் முடிவுகளை மேற்கொள்ளும் பதவிநிலைகளில் பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. உலக ரீதியாக நோக்கும் போது சில நாடுகளில் இன்றும் கூட பெண்களுக்குவாக்குரிமை வழங்கப்படவில்லை. அரசாங்கங்களில் அவர்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவேயுள்ளது. உலகின் பாராளுமன்ற மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பெண்கள் 10 சதவீதத்தினராகவேயுள்ளனர். நாடுகளின் மந்திரி சபைகளில் இடம் பெறுவோர் 3..5 சதவீத எண்ணிக்கையினராவர். ஆசிய பசுபிக் நாடுகளில் இவர்கள் 1.6% னராகவும் ஆபிரிக்காவில் 2.5% னராகவும் இலத்தீன் அமரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் 4.0% னராகவும் காணப்படுகின்றனர்.[13] 1993ஆம் ஆண்டில் பெண்களைத் தலைவர்களாகக் கொண்டதாக ஆறு நாடுகள் மட்டுமே விளங்கின.

இவ்வாறு பெற்றோர், பொருளாதார முயற்சிகள், அரசியல் மட்டங்கள் என்ற பல நிலைகளிலும் பெண்களுக்கான வசதிகள் வரையறுக்கப்படும் போது அல்லது புறமொதுக்கப்படும்போது பெண்கள்கல்வி தொடர்பாக ஆண்களைவிட பலவீனமானவர்-களாகவும், சமஅந்தஸ்து அற்றவர்களாகவும் மாறிவிடுகின்றனர். இத்தகைய வலிமைமிக்க பின்னணி பெண்கள் புதியதும், மிகவும் பயனுறுதி மிக்கதுமான அறிவைப் பெறுதற்கான வாய்ப்புக்கள், சுதந்திரம் என்பவற்றையும், பெற்ற கல்வியறிவை வினைத்திறனுடன் உரிய இடங்களில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள், பின்னணி வசதிகள் என்பவற்றையும் பலவீனப்படுத்தி அல்லது தடுத்து வருகின்றன.

## முன்னேற்றுதற்கான அணுகு முறைகள்

சமுதாயம் முழுவதற்கும் நன்மை-தருகின்ற பெண்கல்வியை முன்னேற்றுதற்கு அதன் பாதையில் நீண்டகாலமாக பன்முகப்பட்ட வகையிலும் ஒன்றிணைந்தவாறும் காணப்படும் பல்வேறு தடைகளையும் இயன்றளவு குறைப்பது அல்லது முற்றாகவே அகற்றுவதற்கான கொள்கையும், அதன்படியான நடைமுறைகளும் அவசியம் வேண்டப்படுகின்றன.

பெண்கள் என்று பொதுவாக குறிப்பிட்டாலும் அவர்களுள்ளும் தீங்குறுகின்ற பிரிவினர் பற்றிச் சிறப்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கிராமிய பெண்கள் வறிய குடும்பத்து பெண்கள், தனிநிலைத்தாய்மார் (Single; Mothers) கைவிடப்பட்ட மனைவிமார் (Abandoned Wives) சமூக இனமற்றும் அரசியல் ரீதியில் ஒடுக்கப்பட்ட சமூக வகுப்புப் பெண்கள், உடல் ஊனமுற்றோர் உளரீதியில் பாதிப்புற்றோர், புவியியல் ரீதியில் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் குடும்பப் பெண்கள், அகதிகளாக நாட்டின் உள்ளே அல்லது வெளியெ வாழும் பெண்கள் போன்ற பல பிரிவினரும் முன்னேறுதற்கேற்ற கொள்கைகள் கல்வி தொடர்பாக சர்வதேச மட்டத்திலும், பிராந்திய மற்றும் தேசிய மட்டத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் உள்ளூர் மட்டத்தில் - நுண்முறையில் பிரச்சினைகள் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். அவற்றினடிப்படையில் பெண்கல்வி தொடர்பாக தெளிவான தொடர்ச்சியான செயல்சார் கொள்கைகள் நெகிழ்ச்சியுடையதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். உலகவங்கி,

யுனெஸ்கோ, கல்வித் திட்டமிடலுக்கான சர்வதேச நிறுவனம் (IIEP) சர்வதேச அபிவிருத்திச் சங்கம் என்பன சர்வதேச ரீதியில் பணியாற்றிவரும் மகளிர் மேம்பாட்டுக்கான அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் நாடுகளின் மகளிர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரத்துக்கான அமைச்சுக்களுடனும் கலந்துரையாடி அகல்விரிவுப்பண்புடைய (Comprehensive) நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்றிட்டங்கள், மற்றும் வேலைத் திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும். இவை குறுங்கால, இடைத்தரகால, மற்றும் நீண்டகால ஒழுங்குமுறையில் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும், பயனுறுதி மிக்கதாகவும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். "உள்ளூர் மட்டத்தில் சிந்தித்து சர்வதேச மட்டத்தில் செயற்படுத்துதல்" என்ற தற்போதைய அணுகு முறையை பின்பற்றும் வகையில் கீழிருந்து மேல் நோக்கிய அணுகுமுறை (Botton Up approach) யில் நாடுகளின் கிராமிய மற்றும் உள்ளூர் மட்ட மகளிர் அமைப்புக்களை [14] பெண்கல்வியை முன்னேற்றும் வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்துதல், அவற்றுக்குவழிகாட்டுதல் உதவி வழங்குதல் மற்றும் அவற்றிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் போன்றவற்றிலும் சர்வதேச நிறுவனங்களும், நிகழ்ச்சி மற்றும் செயற்திட்டங்களும் கவனம் செலுத்த வேண்டும்.

வளர்முக நாடுகளில் பயன்விளை -வுகளை அதிகரிப்பதற்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

## 1. கல்விச் செலவைக் குறைத்தல்

பெண்கள் ஆரம்பக்கல்வி, இடைநிலை மற்றும் உயர்கல்வி கற்பதற்கு ஏற்படக்கூடிய நேரடி மற்றும் மறைமுக செலவுகளை தேசியரீதியில் குறைத்தல் வேண்டும். கல்வி கற்பதற்கான மற்றும் கல்வியறிவைப் பரப்புதற்கான செலவுகளையும் குறைப்பதன் மூலமாகவே பெண்களுக்கான கல்வி வாயில்களை அகலத்திறக்க முடியும் இதற்கு பெற்றோர் (குடும்ப) மட்டத்தில் செலவைக் குறைப்பது முதல் நிலைத் தேவையாகும்.

-கொரியா தனது நாட்டில் படிப்புக் கட்டணங்களை அகற்றுதல், இலவசப்பாடநூல் வழங்குதல், மதியஉணவு பாடசாலைகளில் வழங்குதல், குறைந்த விலையில் பள்ளிச் சீருடை வழங்குதல் போன்றவற்றின் மூலம் பெண்களின் கல்விக்கான பெற்றோர் செலவைக்கணிசமாக குறைப்பதன் மூலம் பெண்கள் மட்டத்தில் கட்டாயக்கல்வியை நடைமுறைப்படுத்தியது. இலங்கையிலும் அத்தகைய பள்ளிசார்ந்த நலன்புரி நடவடிக்கைகள் அரைநூற்றாண்டுகாலத்திலும் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு வருவதால் பெண்கள் கல்வியில் பங்கேற்கும் விகிதம் இலங்கையில் பல்வேறு கல்விமட்டங்களில் சிறப்பானதாக [15] காணப்படுகின்றது. பெருநாட்டில் இத்தகைய நடவடிக்கைகள் ஆண்களை விட கூடுதலாக பெண்களின் பாடசாலை சேரும் விகிதத்தை உயர்த்தியிருந்தன.

-இதற்கு மேலதிகமாக பெற்றோருக்கான அமைச்சு செலவைக்குறைத்து ஊக்கமளிக்கும் வகையில் மானியங்களும் (Subsidies) புலமைப்பரிசில்களும் (Scholarships) வழங்கப்படல் வேண்டும். வங்காளதேசம், குவாத்தமாலா ஆகிய நாடுகளில் இத்தகைய முயற்சிகள் அதிகம் வெற்றியளித்துள்ளன.

-பெண்பிள்ளைகளின் நேரம் தொடர்பாக குடும்பங்களுக்கு ஏற்படும் நட்டங்களைக் குறைப்பதன் மூலம் அவர்களை பள்ளிக்கு அனுப்பும் பெற்றோர் விருப்பத்தை அதிகரிக்க முடியும் இதற்கு பின்வரும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த முடியும்.

(அ). பாடசாலைநாட்கள் மற்றும் பாடசாலை மணித்தியாலங்களை நெகிழ்ச்சியுடையதாக மாற்றியமைத்தல்.
இந்தியாவிலும், சீனாவிலும் இவை அதிகபயனளித்துள்ளன.

(ஆ). கிராமங்களில் சிறு குழந்தைகளை பெண் பிள்ளைகள் தம்முடன் பாடசாலைக்கு எடுத்து வந்து அங்கு பராமரிக்கும் வசதிகளை வழங்குதல். சில நாடுகளில் இதுவும் வெற்றியளித்துள்ளது.

(இ) தண்ணீர், மற்றும் விறகு விநியோகம் தொடர்பாக சீரான, சிக்கனமான நடப்பங்களையும், வசதிகளையும் உருவாக்குதல், இதன் மூலம் பெண் பிள்ளைகள் கல்விகற்பதற்கான நேரத்தை அதிகரிக்கலாம்.

(ஈ). பாடசாலைக்கும் வீட்டுக்குமிடையிலான தூரத்தைக் குறைக்கும் வகையில் பெண்களுக்கான பாடசாலைகளை குறுகிய தூரத்தில் நிறுவுதல். எகிப்தில் பெண்கள் பாடசாலை - வீடுகள் தூரத்தை இரண்டு கிலோமீற்றரிலிருந்து ஒரு கிலோமீற்றராக குறைத்த போது பெண்கள் பாடசாலையில் சேரும் விகிதம் 64இலிருந்து 74ஆக அதிகரித்தது.

பாகிஸ்தான், சிந்து மாகாணத்தில் இத்தகைய பாடசாலைகளின் தூரத்தை 1.5 கிலோமீற்றராக பேணுவதென்று பத்தாண்டுகளுக்கு முன்பே தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகள் பெற்றோர் செலவைக் குறைந்து பெண்களை கூடுதலாக கல்விகற்க அனுமதிப்பதற்கான தூண்டுதல்களை அதிகரிக்க நிச்சயம் உதவும்.

## உ. கலாசாரக் பொருத்தப்பாடு

பெரும்பாலானவளர்முக நாடுகளில் கலாசார ரீதியில் பெண்கள் மீதான கட்டுப்பாடு, மேலாதிக்கம் ஒப்பீட்டு ரீதியில் அதிகமாக காணப்படுவதால், கலாசார ரீதியில் பொருத்தப்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்வதால் பெண்கல்வியை முன்னேற்ற முடியும். பல்வேறு நாடுகளின் அனுபவங்களை பொருத்தமான வகையில் வளர்முக நாடுகள் தம் நாடுகளில் பின்பற்ற முடியும்.

- பெண்கள் பாதுகாப்பு தொடர்பான உட்கட்டமைப்பை விருத்தி செய்தல் வேண்டும். பெண்கள் பாடசாலை சுற்றுப்புற சுவர்களை உயர்த்துதல், தனியான கழிவறைகளை அவர்களுக்கென நிர்மாணித்தல்,

- பெண்களுக்கென தனியான மகளிர் பாடசாலைகளை எல்லா கல்வி மட்டத்திலும் ஏற்படுத்தல். இது பாடசாலையில் சேரும் விகிதத்தை உயர்த்துவதற்கும், பெண்களின் சுயபுலக்காட்சியை விருத்தி செய்வதற்கும், அவர்களது கல்வி சாதனைகளை அதிகரிப்பதற்கும் உதவும். இடைநிலை மட்டத்தில் மொழி, கணிதம் போன்ற பாடங்களில் சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்த இது உதவியுள்ளதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

## 3. கற்றல் – கற்பித்தல் விடய, முறைமாற்றங்கள்

பெண்கள் கல்வி கற்றல், பெண்களுக்குக் கற்பித்தல் தொடர்பாக வளர்முக நாடுகளில் நீண்டகாலமாக நிலவிவரும் மாயைக் கருத்துக்களை மாற்றியமைத்தல் வேண்டும்.

- பெண்களுக்கான பாகுபாடுகளை பலமிழக்கச் செய்யும் வகையிலும், அவர்கள் தொடர்ந்து கற்பதற்கு நாட்டம் பெறும் வகையிலும் பாட நூல்கள் திருத்தி எழுதப்படல் வேண்டும்.

வங்காளதேசம், மாலி, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இத்தகைய முயற்சிகளுக்கென உலக வங்கி உதவிச் செயற்திட்டங்களை நிறைவேற்றி வந்துள்ளது.

- விஞ்ஞானம், கணிதம், கணணிக்கல்வி, தொழில்நுட்பம், பொறியியல், சட்டம், முகாமைத்துவம் போன்ற துறைகளில் கூடுதலாக கல்வி கற்பதற்கு பாடசாலை மட்டத்திலிருந்தே வழி காட்டல்களும், உதவிகளும், ஊக்குவிப்புக்களும் வழங்கப்படல் வேண்டுதத்.

- பெண்கள் பாடசாலைகளில் கற்பிப்பதற்கென பெண் ஆசிரியர்களை அதிகம் நியமித்து அதற்கு ஏற்ற பயிற்சிகளையும் வழங்க வேண்டும். இயன்றவரை உள்ளூரிலிருந்து பெண் ஆசிரியர்களை நியமிப்பது அதிகளவு பயனுறுதியை ஏற்படுத்தும்.
- நேபாளம், யெமான் போன்ற நாடுகளில் இம் முயற்சிகள் அதிகம் வெற்றியளித்தள்ளன.

## டி. உயர்கல்வி முன்னேற்றம்

நாட்டின் பல்வேறு துறைகளும் பெண்கல்வி தொடர்பாக செல்வாக்குச் செலுத்தி வருவதால், அத்தகைய துறைகளின் உயர் பதவிகளை பெண்கள் பெறுவதற்கு உதவும் வகையில் உயர் கல்வி வாய்ப்புக்களும் வசதிகளும் அதிகரிக்கப்படல் வேண்டும்.

விரிவுரையாளர், திட்டமிடுவோர், உயர் தொழில்நுட்பவினைஞர், விஞ்ஞானிகள், தொழில் நிறுவன இயக்குனர், முயற்சியாண்மையினர், சமுதாயத் தலைவர்கள் போன்ற பதவிநிலைகளில் பெண்களின் பங்கு அதிகரிக்கும் வகையில் உயர்கல்வி வாய்ப்புக்களை அதிகரிப்பதில் வளர்முக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பாக பின்வருவனவற்றில் அக்கறை செலுத்த முடியும்.

அ.அருவநிலைப்பல்கலைக்கழகங்களை (Virtual Universities) உருவாக்குதல். கணனி மற்றும் இணையம் (Internet) மூலமாக எல்லா வளர்முக நாடுகளிலும் வாழும் பெண்கள் எல்லோரும் ஒரே தரமான உயர்கல்வி பெற உதவுதல் வேண்டும்.

மெச்சிக்கோ ஆபிரிக்க அருவநிலைப் பல்கலைக்கழகங்களின் அனுபவங்களைப் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆ. மகளிர் பல்கலைக்கழகங்களை (Women Universities) வளர்முக நாடுகளில் இயன்றளவு கூடுதலாக உருவாக்கிக் கொள்ளுதல்
இந்தியாவில் இம் முயற்சி பெரிதும் வெற்றியளித்து வருகிறது.

இ. பெண்கல்வியாளர்கள் மற்றும் நிபுணர்-களை வளர்த்தெடுப்பதற்கென தேசிய ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல செயற்திட்டங்கள் உலக வங்கி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிமற்றும் வழிகாட்டல்களுடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

ஈ சர்வதேச மகளிர் கல்வி உச்சி மகாநாடுகளை சிறப்பாக வடிவமைத்து விழிப்புணர்வையும் ஊக்கத்தையும் சர்வதேச ரீதியாக வளர்த்தல் வேண்டும்.

## முடிவுரை

வளர்முக நாடுகள் இத்தகைய எல்லா முயற்சிகளையும் ஒன்றிணைந்த வகையில் நிறைவேற்ற தொகுப்பு (Package Approach) அணுகுமுறையை கையாள வேண்டும்.

கல்வி தொடர்பான தொகை ரீதியான விரிவாக்கம் மட்டுமன்றி தரரீதியான முன்னேற்றம் மற்றும் உயர்ந்த மட்ட பயனுறுதி என்பவற்றையும் ஏற்படுத்த வேண்டும்

இவ்வாறான முயற்சிகளில் செலவிடும் வளம் தொடர்பாக சிக்கனமும் வினைத்திறனும் பேணப்பட வேண்டும், வளவிரயம் எற்படாதிருக்க எல்லா நாடுகளும் உச்சமட்ட முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும்.

பொதுவாக மகளிர் கல்வி அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அந்தந்த நாடுகளின் சமூக பண்பாட்டு சூழலின் பொருத்தப்பாட்-டினையும் கவனத்திற் கொண்டு அதற்கேற்ற நெகிழ்ச்சி நடைமுறைகளையும் கையாள வேண்டும். திட்டம் என்பதை விட சாதனை என்பதில் கவனம் வைத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

இத்தகைய விடயங்களை திறமையாகக் கையாண்டு, பெண்கல்வி தொடர்பாக காணப்படும் முரண்பட்ட நிலைகளினால் வளர்ந்துள்ள தடைகளை அகற்றி, பெண்களுக்கு வாய்ப்புக்கள், உரிமை என்பவற்றில் சமத்துவத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதால், பெண்கள் தொடர்பாக சமூகமும் உலகும் பெறக்கூடிய நன்மைகளை புத்தாயிரம் ஆண்டில் உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.

## Reference and notes


1. Bellew Rosemary, Laura Raney Subbarao, K.(1992) “Educating Girls” Finance and Development, March, World Bank, p 54.

2. Ibid p. 55

3. Bhatia , K.Gurbachan (1995), “ Development process and Female Partici pation: Some Implications for HRD” Current Trends in Human Resource Development - Challanges and Strategies in a Changing Scenario, New Delhi, p.176.

4. Neelu. Rohmetra (1995) “ Women as Human Resource,” Ibid. p.89

5. DES(1995) Development and Co- operation , DSE, Berlin, P.13.

6. விளக்கத்திற்கு பார்க்க. மேலது.

7. விளக்கத்திற்கு பார்க்க
Sandresegaran, S. and Raja Guunawardhana (1997), Education of Disadvantaged Communities in South Asia, Colombo, pp.13-19.

8. UN (1990) Debt: A Crisis for Development, New york p.60

9. Ibid.

10. விளக்கத்திற்கு பார்க்க
Christa Wichterich,(1992) Progress in India but not for women" D+ C. Berlin. pp. 18-20.

11. விளக்கத்திற்கு பார்க்க
Horowitz, B and Madhu Kishwar (1982) " Family Life - The unequal Deal", MANUSHI 1982/11 New Delhi, p. 15.

12. விளக்கத்திற்கு பார்க்க
Marja - Liisa Swantz (1995) "Women Entrepreneurs in Tanzania: A path to Sustainable livelihoods" Development 1995/ 1 SID Rome pp. 55-60./

13. UN(1990), Opcit, P. 65.

14. இத்தகைய மகளிர் அமைப்புக்கள் பல வளர்முக நாடுகளில் பரவலாக வளர்ச்சி பெற்றுள்ளன. உதாரணமாக: இந்தியாவில் SEWA -Self Employed Women`s Association தன்சானியாவில் Tanzania Gender Network and Women`s Research and Documentation Group at the University of Dares Salaam.

15. இலங்கையில் பெண்களின்:
எழுத்தறிவு விகிதம் 85.
ஆரம்பக்கல்வியில் சேரும் விகிதம் 80
இடைநிலைக்கல்வியில் சேரும் விகிதம்
தரம் 6- 8 - 49.6
தரம் 9- 10 - 51.0.
உயர் கல்வியில் சேரும் விகிதம் 43%.